# 2018 ஜூலை அமாவாசை சாட்சிகள்

**1. ஆனைவாரி - பழனியம்மாள்**




என் மகனுக்கு குழந்தைப் பருவம் முதல் காதில் சீழ் வந்துக்கொண்டிருந்தது. மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை அளித்தும குணமாகவில்லை. சென்ற மாதம் அமாவாசை ஜெபக் கூட்டத்தில் என் மகனுக்காக வேண்டிக்கொண்டேன், இறைவா என் மகனின் காதில் சீழ் வருவது நின்று விட்டால் நான் சாட்சி சொல்கிறேன் என்று வேண்டிக்கொண்டேன். இப்போது என்மகன் குணமடைந்து விட்டான். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி.




**2. கரடிசித்தூர் - ஜெயமேரி**

என் மகளின் திருமண தடை நீங்கி விரைவில் திருமணம் நடைபெறவேண்டும் என்றும், திருமணம் நடந்தால் சாட்சி சொல்கிறேன் என்றும் வேண்டிக்கொண்டேன். என் மகளின் திருமணத்தை நல்ல முறையில் நடைபெற ஆசீர்வதித்த எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி.



**3. இருதயபுரம் - ஜெசிந்தாமேரி** எனக்கு 4 மாதமாக தலைமயக்கம் இருந்து வந்தது. அமாவாசை ஜெபக் கூட்டத்தில் விண்ணப்பம் எழுதி ஜெபித்துக் கொண்டேன். என் தலைவலி நீங்கியது. மகனுக்கும் மருமகளுக்கும் ஒற்றுமையில்லாமல் இருந்தது. அவர்களின் சமாதானத்திற்காகவும் சாட்சி சொல்வதாக வேண்டிக் கொண்டேன். இப்போது அவர்கள் சமாதானத்துடன் இருக்கிறார்கள். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி.



**4. நெல்லிக்குப்பம் - A. ஜோசப்** என் விரலில் தேள் கடித்து வீங்கி வலியால் துடித்தேன். பிறகு என் மகன் எம்மாவுஸ் ஆண்டவர் எண்ணெயை தடவினார். என் வலி நீங்க நானும் ஜெபித்துக்கொண்டேன். பிறகு விரலில் வீக்கம் குறைந்து வலியும் இல்லாமல் போனது. எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி.



**5. அந்தோணிபுரம் - இமல்டாமேரி** ஒவ்வொரு அமாவாசை இரவு நான் ஜெபக்கூட்டத்தில் எனக்கு அரசாங்க வேலை கிடைக்க வேண்டும் என்று வேண்டிக் வந்தேன். இப்போது எனக்கு அரசாங்கத்தில் ஆசிரியர் வேலை கிடைத்து விட்டது. என் எதிர்காலத்தை ஆசீர்வதித்த எமமாவுஸ் ஆண்டவருக்கு நன்றி.


நீதிக்கு இறப்பு என்பது இல்லை (சா.ஞா. 1:15)



**6. தேவியானந்தல் - லீமா** என் அம்மாவுக்கு 1 மாதமாக இருமல், சலி இருந்து வந்தது. பலர் காசநோயாக இருக்கும் என்று கூறினார்கள். அமாவாசை ஜெபக் கூட்டத்தில் கலந்துக்கொண்டு என் அம்மாவின் நோய் குணமாக வேண்டும் என்று வேண்டிக்கொண்டேன். இப்போது என் அம்மாவுக்கு நோய் குணமாகிவிட்டாது. எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி.

**7. ஈருடையான்பட்டு - லூர்துமேரி** குழந்தை சலேத்மேரிக்கு 6 மாதமாக அடிக்கடி காய்ச்சல் வலிப்பு தொடர்ந்து வந்துக்கொண்டே இருந்தது. தொடர்ந்து மருத்துவனைக்கு சென்றும் குணமாகவில்லை. நான் எம்மாவுஸ் ஆண்டவரிடம், குழந்தையை குணப்படுத்தும் ஆண்டவரே, சாட்சி சொல்கிறேன் என்று வேண்டிக் கொண்டேன். என் குழந்தையை குணமாக்கிய ஆண்டவருக்கு நன்றி.





**8. ரிஷிவந்தியம் - அடைக்கலம்** நான் ஒவ்வொரு மாதமும் எம்மாவுஸ் அமாவாசை ஜெபக் கூட்டத்தில் கலந்துகொண்டு வருகிறேன். என் மகனுக்கு நல்லதொரு கல்லூரியில் இடம் கிடைக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டேன். ஆண்டவரே நானும் உன் சமூகத்தில் சாட்சி சொல்ல கிருபை தாங்கப்பா என்று வேண்டிக்கொண்டேன். மகனுக்கு கல்லூரியில் இடம் கிடைத்துவிட்டது. என் வேண்டுதலை நிறைவேற்றிய எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி.

**9. நெடுங்கம்பட்டு - அந்தோணியம்மாள்** என் மகளுக்கு டெங்கு காய்ச்சல் வந்து கண் பார்வை தெளிவில்லாமல் போனது. வயிற்றில் கட்டி இருப்பதாகவும், கூறினார்கள். நான் ஆண்டவரிடம் வேண்டிக் கொண்டேன். என் மகளை குணபடுத்தும் ஆண்டவரே நான் சாட்சி சொல்கிறேன் என்று வேண்டிக்கொண்டேன். என் மகளுக்கு தினமும் எம்மாவுஸ் எண்ணெயை குடிக்க கொடுத்தும், தடவியும் ஜெபித்து வந்தேன்.என் மகளின் காய்ச்சல் நீங்கி குணம்பெற்றாள். ஆண்டவருக்கு நன்றி.





**10. தவமேரி - மணிக்கொல்லை** 3 மாதங்களுக்கு முன்பு வீடு கட்ட வேண்டும் என்று அதற்கு தேவையான பொருட்களை வாங்கி வந்தேன். ஆனால் என் உறவினர்கள் நான் வீடு கட்ட முடியாதபடிக்கு பிரச்சனை செய்தார்கள். வழக்கும் தொடர்ந்தார்கள். நான் அமாவாசை ஜெபக்கூட்டத்தில் கலந்துக்கொண்டு, ஆண்டவரே எனக்காக நீங்க பரிந்துபேசி வழக்கு எனக்கு சாதமாக தீர்ப்பு வர ஆசீர்வதிங்க நான் உமக்கு சாட்சி சொல்கிறேன் என்று வேண்டிக்கொண்டேன். இப்போது வழக்கின் தீர்ப்பு எனக்கு சாதகமாக வந்தது. என் நிலப்பிரச்சனையை தீர்த்து வைத்த ஆண்டவருக்கு நன்றி.



**11. குறிஞ்சிப்பாடி - ராஜகுமாரி** 3 ஆண்டுகளாக எம்மாவுஸ்க்கு வந்துக்கொண்டிக்கிறேன். என் கால் விரலில் காயம் ஏற்பட்டு நடக்க முடியாமல் அவதிப்பட்டேன். மருத்துவமனைக்கு சென்று இரண்டுமுறை அறுவை சிகிச்சை செய்துக் கொண்டேன். ஆனாலும் குணமாக வில்லை. பணம்தான் செலவானது ஆனால் முழுமையாக குணமாகவில்லை. கண் பார்வையிலும் பாதிப்பு ஏற்பட்டது. நான் ஆண்டவரிடம் என் அனைத்து நோய்களையும் குணமாக்கும் ஆண்டவரே, நான் உமக்கு சாட்சிச்சொல்கிறேன் என்று வேண்டிக்கொண்டேன். இப்போது என் கால் குணமானது. எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி.



**12. பழையனூர் - ஆரோக்கியமேரி** எங்களின் வாழ்வாதாரமான கரவை மாட்டை வேறோரு மாடுமுட்டி மாட்டின் மடி வீங்கிவிட்டது. கால்நடை மருந்துவர் இனி மாடு பால் கரக்காது என்றுசொல்லிவிட்டார். நான் மிகுந்த கண்ணீரோடு எம்மாவுஸ் எண்ணெய் தடவி, மாடு குணமாக வேண்டும் என்று வேண்டிக்கொண்டேன். இப்போதுமாடு குணமடைந்து விட்டது. ஆண்டவருக்கு நன்றி. நிலத்தில் நெல் விளைச்சல் கதீர் வரும்போது இரண்டுமுறை மருந்து அடித்தும் பயிர் கருகியது. பிறகு மருந்துடன் எம்மாவுஸ் தண்ணீரை கலந்து ஜெபித்துக்கொண்டே மூன்றாவது முறை மருந்து தெளித்தேன். பயிர் கதிர்கள் நன்றாக செழித்து 100 மடங்கு விளைச்சல் தந்தது.



**13. அதனூர் - பானுமதி** என் கணவருக்கு கிட்னியில் பாதிப்பு ஏற்பட்டு. கை, கால்கள் வீங்கிவிட்டது. அவரால் எதுவும் செய்ய முடியாமல் மிகவும் அவதிப்பட்டார். நான் மட்டும் எம்மாவுஸ் ஆன்மீக மையத்திற்கு வந்து, இயக்குநர் தந்தையிடம் ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். தந்தைஅவர்கள் ஜெபித்துக்கொண்டு, எம்மாவுஸ் எண்ணெய்யை கொடுத்து, இயேசுவின் இரத்தம் ஜெயம் என்று சொல்லிக் கொண்டே இந்த எண்ணெய்யை தடவுங்கள் என்று கூறினார். நானும் அவ்வாறே ஜெபித்துக்கொண்டே எண்ணெய்யை தடவினேன். என் கணவரும் குணமானார். இம்மாதம் ஜெபக் கூட்டத்திற்கு அவரையும் அழைத்து வந்துள்ளேன். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி.



**14. மணிக்கொல்லை - செபஸ்தியம்மாள்** பேரனுக்கு மஞ்சள் காமாலை வந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை அளித்தோம். ஆனாலும் குணமாகவில்லை. நான் அமாவாசை ஜெபக்கூட்டத்தில் கலந்துக்கொண்டு குணமானல் சாட்சி சொல்வதாக வேண்டிக்கொண்டேன். என் பேரனுக்கு மஞ்சள் காமாலை நோய்குணமானது நன்றி ஆண்டவரே.

நமது உயிர் மூச்சு வெறும் புகையே (சா.ஞா. 2:2)